## சந்திரயான்-3 சுற்றுப்பாதை தொலைவு அதிகரிப்பு: இஸ்ரோ அறிவிப்பு



**சென்னை:** நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலம் ஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து கடந்த ஜூலை 14-ம் தேதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, குறைந்தபட்சம் 170 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 36,500 கி.மீ. தொலைவும் கொண்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு வெற்றிகரமாக உயர்த்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: சந்திரயான்-2 விண்கலத்தின் சுற்றுப் பாதையை நீட்டிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதன்படி முதல்கட்ட சுற்றுப்பாதை உயர்த்தும் முயற்சி பெங்களூரில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து வெற்றிகரமாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது விண்கலம் குறைந்தபட்சம் 173 கி.மீட்டர் தொலைவும், அதிகபட்சம் 41,762 கி.மீட்டர் தொலைவும் கொண்ட சுற்றுப்பாதையில் சீரான வேகத்தில் புவியை வலம் வருகிறது. அடுத்த 2 வாரங்களுக்கு சந்திரயான்-3 புவி சுற்றுப்பாதையில்தான் சுற்றிவரும். அப்போது புவிக்கு அருகே விண்கலம் வருகையில் அதிலுள்ள இயந்திரங்கள் இயக்கப்பட்டு சுற்றுப்பாதை தூரம் படிப்படியாக உயர்த்தப்பட்டு ஆகஸ்ட் 1-ம் தேதி நிலவின் ஈர்ப்பு விசைக்குள்

உந்தி தள்ளப்படும். அதன்பிறகு சந்திரயான்-3 நிலவை நோக்கி தனது பயணத்தை தொடங்கும். இவ்வாறு அவர்கள் கூறினர். இதற்கிடையே சுமார் 41 நாட்கள் பயணத்துக்கு பின்னர் ஆகஸ்ட் 23-ம் தேதி நிலவில் சந்திரயான்-3 தரையிறங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**வட மாநில மழை நிலவரம் | கங்கையில் அபாய எல்லையைத் தாண்டி பாயும் வெள்ளம்; மீண்டும் உயரும் யமுனை நீர்மட்டம்**



**புதுடெல்லி:** டெல்லி, உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பரவலாக மழை பெய்த நிலையில் கங்கை ஆற்றில் வெள்ளம் அபாய எல்லையைத் தாண்டி பாய்கிறது. டெல்லியில் யமுனை ஆற்றில் மீண்டும் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதற்கிடையில் இன்றும் உத்தராகண்ட் மாநிலத்துக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழை வரை பெய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

**உத்தராகண்ட் நிலவரம்:** டேராடூன் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இன்று ஜூலை 17 உத்தராகண்ட்

மாநிலத்தின் 13 மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக நேற்று பெய்த மழையால் நிறைய இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது. ஜோசிமத் - மலார் சாலையை இணைக்கும் பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. கிர்தி கங்கா ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கின் காரணமாக அது சேதமடைந்துள்ளது. பிதோர்கர் மாவட்டத்தில் உள்ள காளி ஆற்றிலும் வெள்ளம் 889 மீட்டர் என்ற அபாய எல்லையைக் கடந்து பாய்கிறது. கங்கை ஆற்றிலும் அபாய எல்லையைத் தாண்டி வெள்ளம் பாய்கிறது.

**யமுனை ஆற்றில் மீண்டும் உயரும் நீர்மட்டம்:** டெல்லியில் நேற்று பரவலாக மழை பெய்தது. இன்று காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தின்படி மாநிலத்தில் 13.2 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இன்று டெல்லியில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும், நகரில் ஆங்காங்கே இடியுடன் கூடிய லேசான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று பெய்த மழை காரணமாக யமுனை ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இன்று காலை 7 மணியளவில் நீர்மட்டம் 205.45 மீட்டர் என்றளவில் இருக்கிறது. 205.33 மீட்டர் என்பதுதான் அபாய எல்லை. அதையும் தாண்டி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. முன்னதாக, யமுனை ஆற்றில் வெள்ளம் வடிந்ததால் வாகன ஓட்டிகள் சற்றே இளைப்பாறிய நிலையில் நேற்றைய மழையால் மீண்டும் சாலைகளில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முதல்வர் கேஜ்ரிவால் தலா ரூ.10 ஆயிரம் நிவாரண நிதி வழங்கியிருந்தார்.

## ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி | இந்தியாவுக்கு ஒரே நாளில் 5 வெள்ளி: 27 பதக்கங்களுடன் பட்டியலில் 3-வது இடம்




இந்திய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள்

**பாங்காக்:** ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு ஒரே நாளில் 5 வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன. 27 பதக்கங்களுடன் இந்திய அணி பதக்கப் பட்டியலில் 3-வது இடத்தைப் பிடித்தது.

24-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடைபெற்று வருகிறது. ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், ஹெப்டத்லான், கலப்பு தொடர் ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், உயரம் தாண்டுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தொடர் நேற்று நிறைவடைந்தது. இந்த தொடரில் 6 தங்கப் பதக்கம் உள்பட மொத்தம் 27 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது. இதைத் தொடர்ந்து 6 தங்கம், 12 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கம் என மொத்தம் 27 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப் பட்டியலில் 3-வது இடத்தைப் பிடித்தது.

பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதல் இடத்தையும், சீனா 2-வது இடத்தையும் பிடித்துள்ளன.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற மகளிர் 200 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் இந்திய வீராங்கனை ஜோதி யாராஜி, 23.13 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து 2-

EVA STALIN IAS ACADEMY

வது இடம் பிடித்தார். இதையடுத்து ஜோதி யாராஜி வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார்.

இந்த தொடரில் ஜோதி வென்ற 2-வது பதக்கம் இதுவாகும். நடப்பு தொடரில் ஏற்கெனவே மகளிருக்கான 100 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் ஜோதி யாராஜி தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்திய வீராங்கனை பாருல் சவுத்ரி 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் டி.பி. மனு 2-வது இடம் பிடித்தார். இதையடுத்து இவருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

மகளிர் குண்டு எறிதல் போட்டியில் இந்திய வீராங்கனை அபாகதுவா 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வசப்படுத்தினார்.

இதேபோல் ஆடவர் 400 மீட்டர்தொடர் ஓட்டப் போட்டியில் இந்திய வீரர்கள் 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றனர். கடைசி நாளில் மட்டும் இந்திய அணிக்கு 5 வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரபஞ்சத்தின் வயது 13.7 பில்லியன் ஆண்டுகள் அல்ல: விஞ்ஞானிகளை குழப்பத்தில் ஆழ்த்திய புதிய ஆய்வு**



**ஒட்டாவா:** நமது பிரபஞ்சத்தின் வயது முந்தைய ஆய்வுகளின் படி கணிக்கப்பட்டதைவிட இரண்டு மடங்கு அதிகமானதாக இருக்கலாம் என்று

சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. இந்த கண்டுபிடிப்பு பிரபஞ்சத்தின் வயதை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் தற்போதைய பிரபஞ்சவியல் மாதிரிக்கு சவாலாக அமைந்துள்ளது.

கடந்த காலங்களில், விஞ்ஞானிகள் நமது பிரபஞ்சத்தின் வயதை ‘பிக் பேங்’ எனப்படும் பெருவெடிப்பிலிருந்து காலத்தை அளவிடுவதன் மூலமும், தொலைதூர விண்மீன் திரள்களிலிருந்து ஒளியின் சிவப்பு மாற்றத்தின் (Redshift) மூலம் பழமையான நட்சத்திரங்களைப் ஆய்வு செய்வதன் மூலமும் மதிப்பிட்டு வந்தனர். கடந்த 2021ம் ஆண்டில், தற்போது நடைமுறையில் உள்ள லாம்ப்டா-சிடிஎம் ஒத்திசைவு மாதிரியின் மூலம் பிரபஞ்சத்தின் வயது 13.797 பில்லியன் ஆண்டுகள் என விஞ்ஞானிகள் மதிப்பிட்டனர்.

ஆனால், ஏற்கெனவே கணக்கிடப்பட்ட பிரபஞ்ச வயதை விட மிகப் பழமையானதாக கருதப்படும் மெதுசெலா (Methuselah) போன்ற விண்மீன்களையும் மற்றும் மேம்பட்ட பரிணாம நிலைகளுடன் கூடிய ஆரம்பகால விண்மீன்களையும் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ளது விஞ்ஞானிகளை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த விண்மீன் திரள்கள் பெருவெடிப்பு நிகழ்ந்து வெறும் 200 முதல் 400 மில்லியன் ஆண்டுக்குள் உருவானவை என்பதை ஜேம்ஸ் வெப் கண்டுபிடித்துள்ளது. அவை வித்தியாசமான முறையில் சிறியதாக இருப்பது மேலும் மர்மத்தை உண்டாக்கியுள்ளது. இதுவரை பிரபஞ்சம் குறித்து அறிவியல் உலகம் உருவாக்கி வைத்துள்ள அடிப்படைகளையே தகர்க்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் (University of Ottawa) இயற்பியல் பேராசிரியர் ராஜேந்திர குப்தா, பெருவெடிப்பு நிகழ்ந்து பிரபஞ்சம் தோன்றியது 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அல்ல. கிட்டத்தட்ட இரட்டிப்பு மடங்கான 26.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே பெருவெடிப்பு நிகழ்ந்திருக்கிறது என்று புதிய ஆய்வை சமர்ப்பித்துள்ளார். மேலும் பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்த முந்தைய ஆய்வுகளை மறுபரிசீலனை செய்யவும் ராஜேந்திர குப்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

## அலாஸ்காவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ரிக்டரில் 7.4 ஆக பதிவு - சுனாமி எச்சரிக்கை



**அலாஸ்கா:** அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடலுக்கு அடியில் மையம் கொண்ட இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் 7.4 ரிக்டராகப் பதிவானது. இதனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அலாஸ்கா தீபகற்பத்தின் கடல் பகுதிகளில் இந்திய நேரப்படி இன்று அதிகாலை 6.48 மணியளவில், சாண்ட் பாயின்ட் என்ற நகரத்தின் தென்மேற்கு திசையில் 89 கிமீ தொலைவில் 21 கிமீ ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பால்மரில் உள்ள தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் தெற்கு அலாஸ்கா மற்றும் அலாஸ்கா தீபகற்பத்திற்கு சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது. உடனடியாக கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகில் அதிகம் எரிமலை வெடிப்புகள் மற்றும் நிலநடுக்கங்கள் ஏற்படக் கூடிய ‘பசிபிக் நெருப்பு வளையம்’ என்ற பகுதியின் ஒரு அங்கமாக அலாஸ்கா உள்ளது. கடந்த 1964-ம் ஆண்டு மார்ச் மாதம், அலாஸ்காவில் 9.2 ரிக்டர் அளவிலான மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதுவரை வட அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம் இதுவே. இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அலாஸ்கா வளைகுடா, அமெரிக்காவின்

மேற்கு கடற்கரை மற்றும் ஹவாய் ஆகிய பகுதிகள் பெரும் சுனாமிப் பேரழிவை சந்தித்தன. இதில் 250-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY